இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 133 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 07 – ஞாயிற்றுக்கிழமை 22 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 12+10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 133: Thiruvalluvar Year - 2055 - Margazhi 07 - Sunday 22 December 2024 - Trichy ★★ 12+10 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 50,088 பயனாளிகளுக்கு 284 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கு.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி. வெங்கடாசலம், திருமதி சி.சரஸ்வதி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பதவி சுகத்திற்காக ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டை அடகு வைத்தது அ.தி.மு.க. அரசு

# சொன்னதைச் செய்து காட்டுவது ‘திராவிட மாடல்’ அரசு!

## ஈரோட்டில் - அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

ஈரோடு, டிச.22-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.12.2024), ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், “பதவி சுகத்திற்காக ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டை அடகு வைத்தது அ.தி.மு.க. அரசு! சொன்னதைச் செய்து காட்டுவது ‘திராவிட மாடல்’ அரசு!” என்று குறிப்பிட்டார்.**

இம்மாபெரும் அரசு விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஈரோடு, இந்த மண் தான் தமிழ்நாட்டின் புதிய வரலாற்றுக்கான தொடக்கம்! காரணம், தந்தை பெரியாரைக் கொடுத்த மண் இந்த மண்! தந்தை பெரியார் அவர்கள் நமக்கு பேரறிஞர் அண்ணாவையும், முத்தமிழறிஞர் கலைஞரையும் கொடுத்திருக்கிறார். அவர்கள் இல்லாமல், திராவிட இயக்கம் இல்லை! இன்றைய வளர்ச்சி நிறைந்த அறிவார்ந்த தமிழ்நாடும் இல்லை! நாமும் இல்லை!

### பல புரட்சிகரமான தொடக்கம் விளைந்த ஈரோட்டு மண்!

சில நாட்களுக்கு முன்புதான், ‘ஈரோட்டு பூகம்பம்’ தந்தை பெரியார் நிகழ்த்திக் காட்டிய, ‘வைக்கம் புரட்சி’யின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கேரளத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினோம். கேரள மக்கள் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியைப் பார்த்து பாராட்டுகிறார்கள். இந்த ஈரோடு மண்ணின் மைந்தரான தந்தை பெரியார் அமைத்த அடித்தளம் தான் அதற்குக் காரணம். பல புரட்சிகரமான தொடக்கம் விளைந்த இந்த ஈரோட்டு மண்ணில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்; பூரிப்படைகிறேன்; புளகாங்கித உணர்வோடு இங்கே நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

உங்களையெல்லாம் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தாலும், இந்த நேரத்தில் ஒரு சோகம் எனக்குள் இருந்து வேதனையைத் தந்து கொண்டுதான் இருக்கிறது! கடந்த வாரம் நம்முடைய ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த சோகம்தான் அது! தந்தை பெரியாரின் பேரன் அவர். ஒன்றிய அமைச்சராக, நாடாளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள். அவருடைய இழப்பு ஈரோடு தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல. தமிழ்நாட்டிற்கும் மிகப் பெரிய இழப்பு. இன்றைக்கு அவர் நம்மோடு இந்த மேடையில் இருந்திருந்தால் நம்முடைய திராவிட மாடல் அரசின், சாதனைகளை செயல்திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருப்பார். அவருக்கு இந்தக் கூட்டத்தின் வாயிலாகவும் என்னுடைய அஞ்சலியை நான் செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

இன்றைய நாள், இந்த விழாவின் மூலமாக 951 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 559 புதிய திட்டங்கள் திறப்பு விழா நடைபெற்றிருக்கிறது. 133 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 222 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. 284 கோடியே 2 இலட்சம் ரூபாய் அளவுக்கான நலத்திட்ட உதவிகள் 50 ஆயிரத்து 88 பேருக்கு வழங்கப்படவிருக்கிறது. மொத்தமாகச் சொன்னால்,

### விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார் ஈரோட்டின் நல்முத்து அமைச்சர் முத்துசாமி!

ஆயிரத்து 368 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களின் விழாவாக, இதனை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய ஈரோட்டின் நல்முத்து அமைச்சர் முத்துசாமி அவர்களைப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

பரபரப்பும், ஆர்ப்பாட்டமும் இல்லாமல் நினைத்த செயலை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டக் கூடியவர் நம்முடைய அருமைச் சகோதரர் முத்துசாமி அவர்கள். இந்த நிகழ்வை இவ்வளவு பிரம்மாண்டமாக நிகழ்த்திக் காட்டியிருக்கக்கூடிய அமைச்சருக்கும், அதேபோல் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மாவட்ட அரசு அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்; வாழ்த்துகள்.

கடந்த மூன்றாண்டு காலத்தில், ஈரோடு மாவட்டத்திற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கும் பணிகளின் பட்டியல் மிக மிக நீளமானது. அவற்றில் சிலவற்றை மட்டும் உங்களிடம் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

- மேற்கு மண்டல மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை, கடந்த ஆகஸ்ட் மாதம் 17ஆம் நாள் தொடங்கி வைத்தோம்! இதன்கீழ் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 357 ஏரிகளுக்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்ட நகர்ப் பகுதிகளில், 70 ஆண்டு காலமாக குடியிருந்து வரும் 4 ஆயிரத்து 191 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. நத்தம் நிலவரித்திட்டப் பணிகளுக்கான புதிய அரசாணையின்படி, 2 ஆயிரத்து 922 பட்டா வழங்கப்பட்டு, இன்னும் அந்தப் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.
- ஈரோடு மாவட்ட விளையாட்டு அரங்கில், 400 மீட்டர் சிந்தெட்டிக் ஓடுதளப் பாதையுடன் கூடிய கால்பந்து மைதானம் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
- தந்தை பெரியார் மருத்துவமனையில், 80 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.
- அந்தியூர், பர்கூர், தாளவாடி, தலமலை மற்றும் ஆசனூர் ஊராட்சிகளுக்கு உட்பட்ட 9 கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்கள் வசதிக்காக, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது 3 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 6 பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டை கணக்கில் கொண்டு தாளவாடி மற்றும் பர்கூர் மலைப் பகுதிகளில், 5 கோடியே 64 இலட்சம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# தமிழ்நாடு சட்டப்பேரவை ஜனவரி 6 ஆம் தேதி கூடுகிறது!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு



சென்னை, டிச. 22 -

தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத் தொடர் ஜனவரி 6ம் தேதி தொடங்கும் என சபாநாயகர் மு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் மு.அப்பாவு, அவர்கள் 2025 ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் ஜனவரி 6 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு தொடங்க உள்ளதாக கூறினார்.

அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் சட்டமன்ற கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யப் படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் இன்று (22.12.2024) நடைபெறும்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் இன்று **(22-12-2024) ஞாயிறு காலை 10.00 மணி அளவில்** சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : கழக ஆக்கப் பணிகள்**

குறிப்பு : ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தினை தவறாது கொண்டுவர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.